# காணாமல்போனோர் மீதான அலுவலகமொன்றைத் தாபிப்பதற்கான வரைவுச் சட்டவாக்கம் மீதான சுருக்கமான வழிகாட்டி

மாற்றுக் கொள்கைகளுக்கான
நிலையம்

யூலை 2016

## பின்னணி

தசாப்த காலங்களுக்கு நீடிக்கின்ற நிர்ப்பந்திக்கப்பட்டதும், தன்விருப்பில்லாததுமான காணாமல்போகச்செய்தல்களின் ஒரு தொகையிலான குறிப்பிடத்தக்க சம்பவங்களை இலங்கை கொண்டுள்ளது. ஆயிரக்கணக்கான காணாமல்போனோரைச் சம்பந்தப்படுத்தும் தொடருகின்ற பிரச்சனைக்கு பதிலிறுப்பாக, அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் பெருமளவு விசாரணை ஆணைக்குழுக்கள் உட்பட உத்தியோகபூர்வ புலன்ஆய்வுகளையும், விசாரணைகளையும் தாபித்தன. ஒரு தொடரிலான விசாரணை ஆணைக்குழுக்கள் இருந்தபோதிலும், கடந்த காலத் துஷ்பிரயோகங்களுக்காக உண்மைக்கும், நீதிக்குமான தமது தேடலைப் பெருமளவு இலங்கையர்கள் தொடருகின்றனர். 2015இல், ‘இலங்கையில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறுதலையும் மனித உரிமைகளையும் மேம்படுத்தல்’ என்ற தலைப்பில் ஒருமைப்பாட்டிலான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஏற்றுக்கொண்டதுடன், இது இலங்கையில் நிலைமாற்ற நீதிக்கான வரைச்சட்டமொன்றையும் வழங்கியது. காணாமல்போனோர் மீதான அலுவலகத்தை தாபிப்பதே ஓர் அர்ப்பணிப்பாகும்.

காணாமல்போனோர் மீதான அலுவலகத்தைத் தாபிப்பதற்கான சட்டமூலமொன்றை இலங்கை அரசாங்கம் மே 22 அன்று அறிமுகப்படுத்தியதுடன், சட்டமூலம் 2016 மே 27 அன்று அரசாங்க வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது. இந்த வழிகாட்டியில் சுருக்கமாக கலந்துரையாடப்பட்டுள்ள பலதரப்பட்ட அதிகாரங்களை காணாமல்போனோர் மீதான அலுவலத்திற்கு இந்தச் சட்டமூலம் வழங்குகின்றது. சுதந்திரமானதும், நிரந்தரமானதுமான நிறுவனமொன்றின் ஊடாக காணாமல்போனோரின் ஒரு தொகையிலான பாரிய சம்பவங்களைக் கவனத்திற்கு எடுப்பதைப் பொறுத்தளவில் சட்டமூலத்தின் அறிமுகமானது ஒரு முக்கியமான முன்னோக்கிய நடவடிக்கையாகும். காணாமல்போனோர் மீதான அலுவலகத்தைத் தாபிப்பதில் அடுத்த நடவடிக்கைகள் மிக முக்கியமானவையாகும். சட்டமூலம் தற்போது பாராளுமன்றத்தின் முன் இருப்பதுடன், இலங்கை முழுவதும் உள்ள பாதிக்கப்பட்டவர்களினால் உண்மைக்கும், நீதிக்குமான கோரிக்கைகளுக்கு அமைவாக காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் பணிப்பாணையை சட்டவாக்கச்சபை பலப்படுத்துவது அவசியமானதாகும். சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஏதேனும் தாமதம் இன்றி முழுமையான அமுலாக்கம் இடம்பெறுவது அவசியமாகும். அதாவது சுதந்திரமானதும், அனுபவம்வாய்ந்ததுமான தனிப்பட்டவர்கள் நியமிக்கப்படுவதுடன், அது பயனுறுதிவாய்ந்ததாகச் செயற்படுவதற்கு அவசியமான மூலவளங்களும், உதவியும் வழங்கப்பட வேண்டும்.

காணாமல்போனோரின் பிரச்சினையினதும், தொடர்பான பிரச்சினைகளினதும் மீது அரசாங்க முன்னெடுப்புக்களை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கண்காணித்துள்ளதுடன், அதில் ஈடுபட்டும் உள்ளதுடன், நிலைமாற்ற நீதி மீதான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பினை வரவேற்கின்றது. இக் குறுகிய வழிகாட்டியானது காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் பணிப்பாணையினதும், தொடர்பான பிரச்சனைகளினதும் மீது விழிப்பியலை உயர்த்துவதற்கும் அத்துடன் காணாமல்போனோர் மீதான அலுவலகம் குறித்து பங்காளர்கள் அறிந்து வைத்திருப்பதை உறுதிப்படுத்துவதற்கும், உண்மையையும், நீதியையும், இழப்பீடுகளையும் மற்றும் மீள்-இடம்பெறாதிருப்பதையும் பின்தொடர்வதில் அதனுடன் ஈடுபடுவதற்கு இயலுமான நிலையில் விளங்குவதற்கும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் சமீபத்திய பிரசுரமாகும்.

## காணாமல்போன ஒருவரின் வரைவிலக்கணம் (வாசகம் 27)

நபர் ஒருவரின் விதி அல்லது நடமாட்டங்கள் நியாயமானரீதியில் அறியப்படாததாக நம்பப்படும் ஒருவர் காணாமல்போன ஒருவராக வரையறுக்கப்படுவதுடன், நியாயமானரீதியில் பொறுப்புக் கூறமுடியாததாக நம்பப்படுவதுடன், மூன்று திட்டவட்டமான சூழமைவுகளின் ஒன்றில் காணாமல்போயுள்ளவராகக் கருதப்படுகின்றார். மூன்று சூழமைவுகள் வருமாறு:

1. வடக்கு அல்லது கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதலில் அல்லது அதன் பின்விளைவில், அல்லது □நடவடிக்கையில் காணாமல்போயுள்ளார்□ என அடையாளங் காணப்பட்டுள்ள ஆயுதப்படைகளின் அல்லது பொலிஸின் உறுப்பினர் ஒருவரான நபர்

2. அரசியல் அமைதியின்மை அல்லது சிவில் குழப்பங்கள்; அத்துடன்

3. நிர்ப்பந்திக்கப்பட்ட காணாமல்போகச்செய்தல்களிலிருந்து சகல நபர்களினதும் பாதுகாப்புக்கான சர்வதேசச் சமவாயத்தில் வரையறுக்கப்பட்டவாறு நிர்ப்பந்திக்கப்பட்ட ஒரு காணாமல்போகச்செய்தல்

## பணிப்பாணை (வாசகம் 10)

சட்டமூலத்தின் வாசகம் 10இல் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளவாறு பரந்த பணிப்பாணையொன்றை காணாமல்போனோர் மீதான அலுவலகம் கொண்டுள்ளது. காணாமல்போயுள்ள நபர்களைத் தேடுதல் மற்றும் கண்டறிதல் அத்துடன் அதற்கான பொருத்தமான பொறிமுறைகளை அடையாளங்காணுதல் மற்றும் அத்தகைய நபர் காணாமல்போயுள்ள சூழ்நிலைகளைத் தெளிவுபடுத்துவது ஆகியனவாகவே ஆரம்பநிலையிலான பணிப்பாணை தோற்றுகின்றது. காணாமல்போனோரின் நிகழ்வினைக் கவனத்திற்கு எடுத்தல், காணாமல்போனோரினதும் அவர்களது உறவினர்களினதும் அக்கறைகளைப் பாதுகாத்தல் மற்றும் காணாமல்போனவர்களுக்கும், அவர்களது உறவினர்களுக்கும் கிட்டுகின்ற நிவாரணத்தின் வழிமுறைகளை அடையாளங்காணுதல் மற்றும் அது பற்றி அவர்களுக்கு அறிவித்தல் மற்றும் வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட முன்னைய நடைமுறைகளிலிருந்து காணாமல்போனோர் தொடர்பிலான தரவுகளைத் தொகுத்தல் அத்துடன் மையப்படுத்தப்பட்ட தரவுத் தளமொன்றைத் தாபித்தல், ஆகியனவற்றை காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் பணிப்பாணையின் ஏனைய அம்சங்கள் உள்ளடக்குகின்றன. முன்னைய பொறிமுறைகள் போலன்றி, காலநேரத்திற்கு அக்கறையின்றி, அத்தகைய நபர் காணாமல்போன நபராக வந்ததிலிருந்து சகல காணாமல்போனவர்களையும் காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் பணிப்பாணை உள்ளடக்குகின்றது.

## காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் அதிகாரங்கள் (வாசகம் 11 மற்றும் 12)

காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை வாசகங்கள் 11 மற்றும் 12 ஆகியன அறிமுகப்படுத்துகின்றன. அதன் அதிகாரங்களை நிறைவேற்றுவதில் வாசகம் 14இல் வழங்கப்பட்டுள்ளவாறு உரிமைகளை உறுதிப்படுத்துவதில் சமத்துவத்தினதும், பாரபட்சமின்மையினதும் முக்கியத்துவத்தை காணாமல்போனோர் மீதான அலுவலகம் வலியுறுத்த வேண்டும். மேலும், அது பயனுறுதிவாய்ந்ததாக செயற்பட முடியும் என்பதை உறுதிப்படுத்துவதற்காக விதிகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை காணாமல்போனோர் மீதான அலுவலகம் கொண்டுள்ளது. அத்தகைய விதிகள் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படுவதுடன், 3 மாதங்களினுள் பகிரங்கப்படுத்தப்படவும் வேண்டும் (வர்த்தமானியில் வெளியிடுவதன் ஊடாக) (வாசகம் 26)

### புலன் விசாரணையிலான அதிகாரங்கள் (வாசகம் 12):

- காணாமல்போன ஒருவரின் ஏதேனும் உறவினரிடமிருந்து, அல்லது ஏதேனும் வேறு நபரிடமிருந்து அல்லது தாபனத்திலிருந்து காணாமல்போனோர் தொடர்பில் முறைப்பாடுகளைப் பெறுதல்
- ஒன்றில் முறைப்பாடொன்றை அல்லது முன்னைய ஆணைக்குழுக்களினால் வழங்கப்பட்டுள்ள தகவலைப் பின்தொடர்ந்து, காணாமல்போகச்செய்தல்களையிட்டு ஒரு விசாரணையை அல்லது புலனாய்வை ஆரம்பித்தல். பொதுசன முக்கியத்துவத்திலான மிகவும் அண்மைய அல்லது ஏற்கனவே உறுதியான சான்றினைக் கொண்டுள்ள விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- உயர் மட்டத்திலான இரகசியத்தன்மையொன்றைப் பேணுகின்ற அதேவேளை ஒன்றில் எழுத்திலான, வாய்மொழியிலான அல்லது 'வீடியோ' மூலமாகச் சாட்சியமளித்தல் வசதிகள் அல்லது புகைப்படக்கருவிகள் ஆகியனவற்றின் ஊடாக ஏதேனும் வாக்குமூலங்களை அடைதல் மற்றும் பெறுதல் மூலம் விடயங்களைப் பயனுறுதிவாய்ந்ததாக புலன்விசாரணை செய்வதற்கான அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல். கிட்டுகின்ற தகவலின் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பினை காணாமல்போனோர் மீதான அலுவலகம் கொண்டுள்ளது. அண்மையில் இயற்றப்பட்ட தகவலை அறிவதற்கான சட்டம் காணாமல்போனோர் மீதான அலுவலகத்திற்கு பிரயோகிக்கப்படமாட்டாது (வாசகம் 25).
- வாக்குமூலம் ஒன்றை அளிப்பதற்காக காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் முன் சமூகமளிப்பதற்கு அல்லது அவர்களது கைவசமுள்ள ஆவணமொன்றை முன்வைப்பதற்கு ஏதேனும் நபரை வரவழைப்பதற்கான அதிகாரம்.
- சந்தேகிக்கப்படுகின்ற புதைகுழி அமைவிடங்களின் அகழ்வை அத்துடன்/அல்லது தோண்டியெடுத்தலை மேற்கொள்ளுமுகமாக, ஆள்புல நீதிபரிபாலன எல்லையைக் கொண்டுள்ள பொருத்தமான நீதவான் மன்றுக்கு விண்ணப்பித்தல் அத்துடன் அத்தகைய விசாரணைகளில் அவதானி ஒருவராகச் செயற்படுவதற்கு இயலக்கூடிய நிலையில் விளங்குதல்.
- ஏதேனும் அரசாங்க அல்லது உள்நாட்டு அதிகாரசபை அல்லது முகவர் நிலையம் ஆகியவற்றிலிருந்து அதன் பணிப்பாணையைச் சாதிப்பதற்கு அவசியமான உதவியைக் கோருதல்.
- பிடிவிறாந்தொன்று இன்றி பிரவேசிப்பதற்கும், அல்லது சந்கேதிக்கப்படுகின்ற தடுப்புக்காவல் நிலையங்களையிட்டு புலன்விசாரணை நடத்துவதற்கும், காணாமல்போனோர் மீதான அலுவலகத்தினால் நடத்தப்படும் புலன்விசாரணைக்கு அவசியமான சான்றினைப் பெறுவதற்கும் பொலிஸ் இயலக்கூடியதாக விளங்குவதற்கு தேடுதல் பிடிவிறாந்தொன்றினை வழங்குமாறு நீதவானுக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் அலுவலர் ஒருவருக்கு அதிகாரமளித்தல்
- காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் பணிப்பாணைக்கு வெளியில் விளங்கும் விடயங்களை பொலிஸுக்கு அல்லது சம்பந்தப்பட்ட சட்டவினைப்படுத்தல் அதிகாரசபைக்கு பாரப்படுத்தல்
- புலன்விசாரணையொன்றை அவசியப்படுத்துகின்ற குற்றமொன்று இழைக்கப்பட்டிருந்தால் காணாமல்போன ஒருவர் மீதான தகவலைக் கொண்டுள்ள அறிக்கைகளைக் கையளித்தல். சாட்சியொருவர் சம்மதித்தால் புலன்விசாரணையின் நடைமுறையில் பயன்படுத்துவதற்காக அத்தகைய சாட்சியிடமிருந்து வாக்குமூலமொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக அத்தகைய சம்பந்தப்பட்ட அதிகாரத்தைக் கொண்டவர்களை

### பொதுவான அதிகாரங்கள் (வாசகம் 11):

- தகவலைப் பெறுவதற்கான உடன்பாடுகள், தகவலின் இரகசியத்தன்மையைப் பேணுதல்; தொழில்நுட்ப ஆதரவையும் பயிற்சியையும் மற்றும் கூட்டுமுயற்சியையும் பெறுதல் அத்துடன் தரவுத் தளங்களைத் தாபித்தல் ஆகியன உட்பட உள்நாடாக அல்லது வெளிநாடாக இருந்தாலும் ஏதேனும் நபருடன் அல்லது தாபனத்துடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளல்.
- காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் சந்திப்புக்களை ஆளுகின்ற அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகள் அத்துடன் விதிகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல், நிறைவேற்றுதல் அத்துடன் வெளியிடுதல் ஆகியன தொடர்பில் காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் சகல பணியாளரினால் பின்பற்றப்படுவதற்கு விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.
- பணியாளரையும், உசாவலர்களையும் நியமித்தல் மற்றும் பதவிநீக்குதல் அத்துடன் காணாமல்போனோர் மீதான அலுவலகத்திற்கு அரசாங்க அலுவலகங்களின் மாற்றுப்பதவி அமர்த்துகையைக் கோருதல்
- அலுவலகத்தின் பயனுறுதிவாய்ந்த முகாமைத்துவத்திற்கும், செயற்பாட்டுக்கும் அவசியப்பட்டவாறு குழுக்களையும், அலகுகளையும் மற்றும் பிரிவுகளையும் தாபித்தல்.

**காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் பணிகள் மற்றும் கடமைகள் (வாசகம் 13)**

- புலன்விசாரணைக்கு அது ஊறுவிளைவிக்காத வரை குடும்பத்தினருக்கு நடந்து கொண்டிருக்கும் புலன்விசாரணை மீதான நிலை பற்றிய அறிக்கைகளை வழங்குதல்.

- காணாமல்போனவர் உயிருடன் இருப்பதாகக் கண்டறியப்பட்டால், அவரின் சம்மதத்துடன் தகவலை வெளிப்படுத்துதல்.

- புலன்விசாரணையொன்று முடிந்தவுடன், காணாமல்போனவரின் விதியையும், நபர் காணாமல் போனதற்கான சூழ்நிலைகளையும் காணாமல்போனோர் மீதான அலுவலகம் உறவினர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

- காணாமல்போனவர் குறித்து புலன்விசாரணையொன்றை நடத்துவதுடன், அறிக்கைகளையும் (இடைக்கால மற்றும் முடிவான) வழங்கவேண்டும். இதனால், ஒன்றில் கண்டறியப்படாதிருப்பின் சான்றுப்பத்திரமொன்றை அல்லது மரணச் சான்றுப்பத்திரமொன்றைப் பதிவாளர் நாயகம் வழங்கலாம்.

- காணாமல்போனவரின் உறவினர்களுக்கு நிருவாக உதவியையும், சேமநலன் சேவைகளையும் வழங்குதல்.

- காணாமல்போனோருக்கு அத்துடன் /அல்லது காணாமல்போனவரின் உறவினர்களுக்கு இழப்பீடுகளை வழங்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குப் பரிந்துரைத்தல்.

- காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் முன் ஆஜராகும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சிகளுக்கும் பாதுகாப்பளிப்பதற்கான முறைமையொன்றைத் தாபித்தல்.

- காணாமல்போனோர் தொடர்பில் தரவுத் தளமொன்றை உருவாக்குதல், நிருவகித்தல் மற்றும் பராமரித்தல்

- காணாமல்போனோரின் காரணிகள், நிகழ்வு மற்றும் விளைபயன்கள் ஆகியனவற்றில் பொதுசன விழிப்புணர்வை உருவாக்குவதை நோக்கியும், காணாமல்போனோரின் உறவினர்களுக்கு ஆதரவளிப்பதையும் அத்துடன் சட்ட, உளநிலைச்சமூக மற்றும் நிருவாக ஆதரவுக்கான அவர்களது அடைதலுக்கு வசதியளிப்பதை நோக்கியும் நடவடிக்கைகளை எடுத்தல்

- பின்வருவன மீது சம்பந்தப்பட்டவர்களுக்கு பரிந்துரைகளைச் செய்தல்: எதிர்காலத்திலான காணாமல்போகச்செய்தல்களைத் தடுத்தல், காணாமல்போனவர்களை நினைவுகூருவதற்கும், ஏற்றுக்கொள்வதற்குமான வழிகள், காணாமல்போன நபர் ஒருவர் தொடர்பான தகவலை வெளியிடுதல், சம்பந்தப்பட்ட சட்டங்களையும், ஒழுங்குவிதிகளையும், இழப்பீடுகளையும் விருத்திசெய்தல், அடையாளங்காண முடியாததும், அடையாளங்காணக்கூடியதுமான எச்சங்களை கையாள்தல். காணாமல்போனோர் மீதான அலுவலகத்தினால் நடத்தப்படும் புலன்விசாரணைகளிலிருந்து முடிவுகள் குற்றவியல் அல்லது சிவில் பொறுப்புக்கு உயர்ச்சியை வழங்கமாட்டா.

- அத்தகைய பரிந்துரைகளைச்செய்யும் போது, பொருத்தமானது எனக் கருதப்பட்டால், காணாமல்போனோரின் உறவினர்களுடன் அத்துடன்/அல்லது காணாமல்போனோரைப் பிரதிநிதிப்படுத்தும் தாபனங்களுடன் கலந்தாலோசித்தல்.

**காணாமல்போனோர் மீதான அலுவலகம் (வாசகம் 4)**

அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் மீது ஜனாதிபதியினால் நியமிக்கப்படுதல். காணாமல்போனோர் மீதான அலுவலகம் 7 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் என்பதுடன், அதில் ஒருவர் தவிசாளராக நியமிக்கப்படுவார். அலுவலகத்தின் உறுப்பினர்கள் பின்வருவன உட்பட ஆனால் அவற்றுக்கு மட்டுப்படாமல் முன்கூட்டிய விஸ்தாரமான அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்: காணாமல்போனோர் மீதான அலுவலகச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சர்வதேச மனிதாபிமானச் சட்டம், மனித உரிமைகள் சட்டம், மனிதாபிமானப் பதிலிறுப்பு மற்றும் புலன்விசாரணை/உண்மை அறிதல் என்பவற்றை உள்ளடக்கும். உறுப்பினர்கள் மூன்று வருடங்களுக்கு பதவியை வகிக்க வேண்டும் என்பதுடன், ஆகக்கூடுதலாக இரு தவணைகள் கருமமாற்றலாம். கொழும்பில் தலைமை அலுவலகம் அமைந்திருக்கும் என்பதுடன், அவசியப்பட்டால் பிராந்திய அலுவலகங்களைத் தாபிப்பதற்கான தற்றுணிபை காணாமல்போனோர் மீதான அலுவலகம் கொண்டிருக்கும்.

**செயலகம் (வாசகம் 16)**

காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் விவகாரங்களுக்கு அதாவது காணாமல்போனோர் மீதான அலுவலகம் கடமைகளையும், செயற்பாடுகளையும் புரிந்துகொள்ளுதல் மற்றும் இச் சட்டமூலத்தின் 11 முதல் 13 வரையிலான வாசகங்களில் சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ள அதன் உடமையாக்கப்பட்ட அதிகாரங்களை நிறைவேற்றுதல் ஆகியவற்றுக்கான பொறுப்புடன் செயலகமொன்று தாபிக்கப்படும். மேலும், காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் நிருவாகத்தை முற்றுமுழுதாக செயலகம் நிருவகிக்கும். அதன் பணியில் உதவியளிப்பதற்காக திட்டவட்டமான அலகுகளையும், பிரிவுகளையும் காணாமல்போனோர் மீதான அலுவலகம் கொண்டிருக்கும். எதிர்காலத்தில் ஏனையோரை நியமிப்பதற்கான தற்றுணிபுடன் சட்டமூலத்தில் இருவர் பெயரிடப்படுவார்கள்.

**தேடியறியும் அலகு (வாசகம்17)**

காணாமல்போனாரைக் கண்டுபிடிப்பதற்கும், தேடுவதற்கும் இந்த அலகு பொறுப்பாக இருக்கும் என்பதுடன், செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு “ சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப மற்றும் சட்ட மருத்துவ நிபுணத்துவத்துடன் உள்ளவர்கள் உட்பட தகுதியானதும், அனுபவம்வாய்ந்ததும் அத்துடன் தகைமையானதுமான விசாரணையாளர்களை” உள்ளடக்க வேண்டும்.

**பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சி பாதுகாப்புப் பிரிவு (வாசகம் 18)**

காணாமல்போனோர் மீதான அலுவலகத்துடன் ஈடுபட்டுள்ள பாதிக்கப்பட்டவர்களினதும், சாட்சிகளினதும் சேமநலனையும், பாதுகாப்பினயும் உறுதிப்படுத்துவதில் சகல “ பொருத்தமான நடவடிக்கைகளை” எடுப்பதற்கு இப்பிரிவு பொறுப்பாகவுள்ளதுடன், அவசியமான போது சட்டவினைப்படுத்தல் முகவராண்மைகளுடன் ஒருங்கிணைக்கவும் முடியும்.

**நிதி (வாசகம் 19)**

ஒன்றுதிரண்ட நிதியத்திலிருந்து நிதியங்களைக் காணாமல்போனோர் மீதான அலுவலகம் பெற முடியும் என்பதுடன், அதன் பணிப்பாணையைச் சாதிப்பதற்கு தனது சொந்த நிதியங்களைக் கட்டியெழுப்பவும் முடியும். பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கைகளைக் காணாமல்போனோர் மீதான அலுவலகம் சமர்ப்பிக்க வேண்டும். அதேசமயம், அந்த அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவும் வேண்டும். காணாமல்போனோர் மீதான அலுவலகத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படும்.

**ஓர் அவதூறிலான குற்றம் (வாசகம் 24)**

சில நடவடிக்கைகளைக் குற்றமாக்கும் வாசகம் 24இல் வழங்கப்பட்டுள்ளவாறு குறித்துரைக்கப்பட்டுள்ள தருணங்களின் கீழ் காணாமல்போனோர் மீதான அலுவலகத்திற்கு எதிராக அவதூறிலான குற்றமொன்று சாத்தியமானதாகும்.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக, ஆளுகை மற்றும் மோதல் தீர்வு பற்றிய பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷணைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது குறித்த மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, ஆதரித்துவாதாடல், ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

முகவரி : 6 / 5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு-05
இணையதளம் : www.cpalanka.org
மின்னஞ்சல் : info@cpalanka.org
முகநூல்: www.facebook.com /cpasl
டுவிட்டர் : @cpasl